REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 10உ திங்கள் (25—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 11உ செவ்வாய் (26—11—57) [இதழ் 140

குஷ்ட நோய்க்குப் புதிய மருந்து!

நியூயார்க், நவ. 25—

புதிய முறையில் கந்தகக் கலவைகளைத் தயார் செய்து 'சல்போன்ஸ்' என்னும் புதிய மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. அது குஷ்ட நோய் அதிகமாகாதபடி தடுக்கும். அதன் விலை அதிகம் அல்ல. அதனை மாத்திரைகளாக உட்கொள்ளலாம். நோயின் ஆரம்ப காலத்தில் அந்த மருந்து நோயைத் தடுத்துவிடுகிறது. இந்த விவரங்களை உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் விக்டர் டபோனு தெரிவித்துள்ளார்.

இந்தி ஏற்கனவே ஆட்சி மொழி ஆகிவிட்டதாம்

வெளிநாடுகளுடன் கடிதத் தொடர்பு இந்தியில்தான் நடைபெறுகிறதாம்

எல்லோரும் சீக்கிரம் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமாம்

காங்கிரஸ் செயலாளர் கூறுகிறார்

'இந்தியைத் திணிக்கமாட்டோம்' என்று டெல்லிப் பெரியவர்கள் அவ்வப்போது தரும் உறுதி மொழிகள் எவ்வளவு வஞ்சகம் தோய்ந்தவை என்பதை காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் விளக்கியிருக்கிறார்.

ஐதராபாத் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இந்தி ஏற்கனவே இந்தியாவின் ஆட்சி மொழியாகிவிட்டதாகப் பேசியிருக்கிறார்.

ஆட்சி மொழிக் குழு, அதன் அறிக்கையைப் பரிசீலிக்க பாராளுமன்றக் குழு என்பதெல்லாம், மேற்கொள்ளப்பட்ட முடிவினை நியாயப்படுத்தவும், இந்தித் திணிப்பினைத் தீவிரப்படுத்தவும்தானே தவிர வேறெதற்குமல்ல என்பதை, அவரது பேச்சு அம்பலப்படுத்துகிறது.

"முடிந்த சீக்கிரத்தில் எல்லா இந்தியர்களும் இந்திமொழி அறிவு பெற்றுக்கொள்ள வேண்டும்.

"ஏனெனில் இந்திய சர்க்காரின் சர்வதேச கடிதத் தொடர்புகள் இந்தியில்தான் நடைபெறுகின்றன.

"இந்தி இப்பொழுது இந்தியாவின் ஆட்சிமொழியாகிவிட்டது"

என்று, அவர் பேசியிருக்கிறார்.

"டெல்லியில் நடைபெறும் எல்லா சர்வதேச அரங்குகளிலும் பிரதமர் நேரு இந்தியில்தான் பேசுகிறார்.

"இந்திய—சீனப் பிரதமர்களோ, இந்திய—யூகோ குடியரசுத் தலைவர்களோ வெளியிடும் கூட்டு அறிக்கைகள், இந்தியில்தான் வெளியிடப்படுகின்றன.

"வெளிநாடுகளில் நமது தூதுவர்களும் தங்களின் பதவி நியமனப் பத்திரங்களை இந்தியில்தான் தருகின்றனர்"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆங்கிலம் எப்படி அன்னிய மொழியாகும்?

ஜெனரல் கரியப்பா கேட்கிறார்

பெங்களூர், நவ. 23—

இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில், ஜெனரல் கரியப்பா, ஆங்கிலத்தின் அவசியம் பற்றி மீண்டும் வற்புறுத்தியிருக்கிறார்.

"காஷ்மீர் முதல் கன்னியா குமரி வரை பேசப்படக்கூடியதாக உள்ள ஒரே மொழி ஆங்கிலம்தான் என்பதை அவர் விளக்கினார்.

"கடந்த 200 ஆண்டுகளாக நம்மிடம் பழக்கத்திலிருந்து வரும் ஆங்கிலம் எப்படி அன்னிய மொழியாகும் என்று எவரேனும்கூற முடியுமா?"

என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

இந்தியைத் திணிக்க தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையாம்!

ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க முடியாதாம்!

ஸ்ரீமன் நாராயணனின் முரண்பட்ட பேச்சு

"இந்தியாவின் ஆட்சிமொழியாக இன்னும் பல காலத்திற்கு ஆங்கிலமே உபயோகிக்கப்படவேண்டும் என்று கூறுகிற சிலரும் இருக்கிறார்கள்.

"நாங்கள், ஆங்கிலம் என்பதினாலேயே அதனை எதிர்க்கவில்லை; இன்றைய உலகின் மிக முக்கியமான மொழிகளுள் அது ஒன்று; வளமான இலக்கியங்கள் ஆங்கிலத்தில் உண்டு; சர்வதேசத் தொடர்புகொள்ள பயன்மிக்க ஒரு மொழிதான்.

"ஆனால், இந்தியைப் புகுத்துவதற்கு எந்தவிதத் தீவிர முயற்சிகளையும் மேற்கொள்ளாமலிருக்கும்போது, ஆங்கிலமே நீடிக்கவேண்டும் என்று கூறுவதில் நியாயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"ஒரு சுதேச மொழியின் இடத்தை ஒரு அன்னிய மொழி பெறமுடியாது; எனவே, ஆட்சிமொழியாக இந்தி பெற்றுள்ள இடத்தை ஆங்கிலம் பெறவேமுடியாது"

என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் ஆந்திர இந்தி மாணவர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதே கூட்டத்தில்தான் அவர், இந்தி ஏற்கனவே ஆட்சிமொழியாகிவிட்டது என்பதையும் கூறியிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர், இந்தி, இந்தியாவின் தேசிய மொழி ஆவதை சிலர் எதிர்க்கிறதாதிருஷ்டமான நிலைமை இருப்பதாகவும் கூறியிருக்கிறார்,

திட்டப் பகுதியில் வேலைநிறுத்தம்?

தாமோதர பள்ளத்தாக்கு நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 18 கோரிக்கைகளை அறிவித்துள்ளனர்; டிசம்பர் 5-ந் தேதிக்குள் அவை நிறைவேற்றப்படாவிட்டால் 18,000 தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

வேலையிலிருந்து நீக்கப்படுபவர்களுக்கு வேலை தேடித் தரப்பட வேண்டும் என்பது அவர்களின் முக்கிய கோரிக்கை.

நேபாளத்தில் இந்திக்கு எதிர்ப்பு

இருகோஷ்டிகளிடையே கைகலப்பு 25 பேர் படுகாயப்பட்டனர்

காட்மண்டு, நவ. 22—

நேபாளத்தில் பிட்ரகுண்டா நகரத்தில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற மொழித் தகராறு கைகலப்பாக முற்றி சுமார் 25 பேர்வரை காயம்பட்டனர் என்று கூறப்படுகிறது.

நேபாளத்தில், நேபாளி மொழியே எல்லா மக்களின் மொழியாக இருக்க வேண்டுமென்று கோருகிறவர்களுடன், இந்தி நாள் கொண்டாடிய இந்தி பேசும் மக்களின் ஊர்வலத்தினர் மோதிக்கொண்டதின் விளைவாக இந்தத் தகராறு ஏற்பட்டிருக்கிறது.

திட்டத்தின் பிரதான அம்சங்கள் எவை?

மத்திய மந்திரி தரும் விளக்கம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரதான அம்சங்கள் என்பவை எவை?

திட்ட இலாகா உதவி மந்திரி எஸ். என். மிஸ்ரா தரும் விளக்கத்தைப் பாருங்கள்:—

மூன்று புதிய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள், இப்போதுள்ள உருக்குத் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம், நிலக்கரித் திட்டங்கள், இரயில்வே அபிவிருத்தி, சில குறிப்பிட்ட மின்சாரத் திட்டங்கள்—இவைதான் திட்டத்தின் பிரதான அம்சங்களாம்.

இதை மக்கள்சபையில் அந்த மந்திரி தெ[illegible]த்திருக்கிறார்.

உடனே டி. கே. சௌத்ரி என்ற உறுப்பினர், 'அப்படியானால், இதர திட்டங்கள் எல்லாம் வெட்டப்பட்டுவிட்டன என்று கொள்ளலாமா?' என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு மந்திரி 'அப்படி இல்லை; இதர திட்டங்களும்கூட முதலிடம் பெறலாம்' என்று கூறினாராம்.

இலண்டனில் இந்துமத ஆலயமாம்!

ரூ. 2 இலட்சம் செலவில் கட்ட ஏற்பாடு

இலண்டன் நகரில் ரூ. 2 இலட்சம் செலவில் ஒரு இந்துமத தேவாலயம் கட்ட ஏற்பாடு நடக்கிறதாம்.

இங்கு இராமகிருஷ்ண மடத்தின் கிளை ஒன்று உள்ளது; அதில் இப்போதுள்ள கோவில் மிகச் சிறியதாயிருக்கிறதாம்.

எட்வர்டு தார்ன்டன் என்ற ஒரு ஆங்கிலேயர் இந்தக் கோவிலுக்கான இடம் தந்தாராம்.

ஆனால் இப்போது பக்தர்கள் எண்ணிக்கை அதிகமாகிவிட்டதாம்.

சுமார் 500 பேர் சராசரியாக வழிபட வருகின்றனாராம். விசேட தினங்களில் ஆயிரம் பேர்கூட வருகின்றனராம். இதனால்தான் இப்போதுள்ள கோவில் போதவில்லையாம். பெரிய கோவில் கட்ட இரண்டு இலட்சம் ரூபாய் வேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறது.

பம்பாய், அகமதாபாத், சென்னை ஆகிய இடங்களில் உள்ள இராமகிருஷ்ண வேதாந்த நிலையங்களைச் சேர்ந்தவர்கள் ரூ. 50,000 வரை தந்துவிட்டனராம்.

சந்தேகமின்றி பேராசையானதே!

உணவுத்துறையில் தன்னிறைவுபெருமல் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இயலுமா?

இரண்டாம் திட்டம்: கொச்சி வர்த்தகக்கழகத் தலைவர் கண்டனம்

எர்ணகுளம், நவ. 22—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் சந்தேகமின்றி பேராசையான திட்டமாகும்; ஏனெனில், உணவு நிலையைத் தவறாகப் புரிந்துகொண்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும்"

என்று, கொச்சி வர்த்தகக் கழகத்தின் நூறாவது ஆண்டு விழாக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றுகையில் டபிள்யூ ஈ. நார்த்தே என்பார் கூறியுள்ளார்.

"உணவுத் துறையில் தன்னிறைவு பெறாத எந்த ஒரு நாடும், தனது பொதுவான வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியாது; உணவுத் துறையில் தன்னிறைவு பெறுவதை உறுதி செய்வதுதான், நமது திட்டக் கர்த்தாக்களின் பிரதானமான கடமையாகும்"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25—11—57 திங்கள்

உடனடி தேவை என்ன?

இந்தியப் பேரரசின் உணவுக் கொள்கையை நாம் பலமுறை ஆராய்ந்து, பல குறைபாடுகளை அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்துள்ளோம். மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத தேவை உணவு; இதை மக்களுக்கு அளிப்பது அரசாங்கத்தின் கடமை; ஆனால், உணவுப் பிரச்சினையைத் தக்கமுறையில் ஆராய்ந்து ஆக்கப்பணியில் ஈடுபட இந்தியப் பேரரசு தவறியுள்ளதாகக் கூறப்படுவதை, அசோக மேதா குழுவின் அறிக்கை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் நிலைமையை ஆராய்ந்து, மக்கள் தொகைக்கு ஏற்ற அளவுக்குத் தேவையான உணவு உற்பத்தியை இந்தியா இன்னும் எத்தனை ஆண்டுகளில் அடையும் என்பதை, குழுவின் அறிக்கை தெளிவாகக் கூறவில்லை. எனவே, நாட்டின் உணவுத் தேவையை, உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் நாமே ஈடுசெய்ய முடியும் என்பது, வெறும் திண்ணைப் பேச்சாகிவிட்டது.

ரூ. 2,000 கோடி செலவில் நாட்டின் உணவு உற்பத்தியை அடிப்படையாகக்கொண்டு திட்டப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, 'வெளிநாட்டிலிருந்து உணவு இறக்குமதி மேலும் நீடிக்காது' என்று ஒருசிலரும், 'அந்நிய நாடுகளுக்கு இந்தியா உணவுத் தானியம் ஏற்றுமதி செய்யும்' என்று வேறு சிலரும் பேசிவந்தது, பதவி வெறியர்களின் வெறும் ஏமாற்றுப் பேச்சு என்பதை, காலம் எடுத்துக்காட்டி வருகிறது.

'இரண்டாவது திட்டத்தில் உணவு உற்பத்தி பற்றி நிர்ணயிக்கப்பட்ட வரம்பை அடைய முடியாது' என்று மேதா குழுவின் அறிக்கை தெளிவாக்குகிறது.

'தன் கையே தனக்கு உதவி' என்ற உயரிய இலட்சியத்துடன், நாட்டின் தேவையை வெளிநாடுகளின் உதவியின்றி ஈடுசெய்துகொள்வது உண்மையில் பாராட்டத்தக்கதுதான்; ஆனால், அந்தக் கொள்கையை எந்தெந்த நாடுகள்—எந்தெந்தத்துறையில்—எந்தெந்த அளவுக்குக் கடைப்பிடிக்க முடியும் என்பதையும் நன்கு ஆராய்ந்தறிய வேண்டியது அவசியமாகும்.

விவசாய நாடாகக் கருதப்படும் இந்தியா, நிலவளம்—நீர்வளம்—மக்கள் திறன் ஆகியவைகளைப் பெற்றிருந்தும், இன்று உணவுப் பற்றுக்குறை—உண்ண உணவில்லாது மக்கள் திண்டாட்டம்—பதுக்கல், விலை உயர்வு போன்ற தடுக்க முடியாத நிலைகள் இருப்பதற்கு யார் பொறுப்பு? இது எதைக் காட்டுகிறது? திட்டம் தீட்டுவதாகக் கூறி, மக்களின் வரிப் பணத்தைப் பாழாக்கும் செயலில் ஈடுபட்டவர்கள் அல்லவா இதற்குப் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள்?

1854-ம் ஆண்டிலேயே இந்தியா, உணவுத் தேவையை உற்பத்தி மூலம் அடைந்துவிட்டது என்று வீண் பெருமை பேசியவர்கள்தான் இன்றும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளனர்; அவர்களிடமே தான் இன்றும் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பும் உள்ளது.

உற்பத்தி போதிய அளவு இல்லை என்ற உண்மை வெளியாகியுள்ளது; ஏற்பட்டுள்ள உற்பத்தி எவ்வாறு மக்களுக்கு விநியோகிக்கப்படும்—மக்களுக்குப் போதுமான அளவு உணவு கிடைக்குமா—பற்றுக்குறையின் அளவு என்ன என்பனவற்றை மதிப்பிட்டுப் பார்க்கும்போது இப்போது எதிர்பார்க்கப்படும் உற்பத்தி அளவை அடைய நேர்ந்தாலும், 30 இலட்சம் டன் உணவுத் தானியத்தை ரூ. 150-கோடி மதிப்புக்கு அந்நியச் செலாவணி மூலம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலை உள்ளது என்று, மேதா குழுவின் அறிக்கை கூறுகிறது.

'சுயதேவைப் பூர்த்தி' என்ற பகட்டுக் கௌரவத்தில் மயங்கிக் கிடக்காமல், மக்களின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க ஆட்சியாளர் முன்வரவேண்டும்.

மக்களின் தேவைக்கு வெளிநாடுகளிலிருந்து தேவையான அளவு உணவுத் தானியங்களை இறக்குமதி செய்வது கௌரவக் குறைவானதல்ல; மக்கள் நலனுக்காக அவ்வாறு செய்வது, ஆட்சியாளருக்குள்ள முக்கிய கடமையாகும்.

திட்டத்தின் நடைமுறைப் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள், அடிப்படை இலக்குகளை நிறைவேற்றத் துடிப்பது போன்ற அளவில், உணவுப் பிரச்சினையில் தீவிரம் காட்டத் தவறியுள்ளனர்.

அந்நியச் செலாவணியில் உள்ள பற்றுக்குறை நிலை, உணவு இறக்குமதியில் குறுக்கிடக்கூடாது. உணவுப் பிரச்சினைக்கு முதலிடம் தரப்படவேண்டும். அதைவிட்டு, 'மக்கள் அதிகம் சாப்பிடுகிறார்கள்; அதிகம் சாப்பிடுவது வியாதிக்கு இடம் தரும்' என்று 'பெரிய தலைவர்கள்' பேசுவது, பசித்தவனைப் பார்த்து கேலி செய்வதுபோல் உள்ளது.

இவ்வாறான நிலைமையிலிருந்து தலைவர்களென்போர் தெளிவுபெற்று, நாட்டின் உணவுத் தேவையைக் கவனிக்க உடனடியாக முனையவேண்டும். உண்மைகளை மறைத்தும், மறுத்தும் பேசுவது போன்ற செயல்களில் ஈடுபடுவது, நாகரிக அரசியலுக்கு நல்லதல்ல!

மக்கள்சபையில் இரு ஒத்திவைப்புப் பிரேரணைகள் நிராகரிப்பு!

புதுடில்லி, நவ. 22—

மக்கள் சபையில் இன்று கொண்டுவரப்பட்ட இரண்டு ஒத்திவைப்புப் பிரேரணைகளை, சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் நிராகரித்தார்.

இந்தியாவில் ஒரு சுவீடன் கம்பெனிக்குச் சொந்தமான தீப்பெட்டித் தொழிற்சாலையில் புதிய இயந்திரங்களைக்கொண்டு சிக்கனச் சீரமைப்புச் செய்ததினால் சுமார் 1,600 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்றும், இந்த அநீதியைக் கண்டித்து தொழிலாளர் அனைவரும் கடந்த ஒருமாத காலமாக உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர் என்றும், இதற்கும் நிர்வாகம் அசைந்து கொடுக்காததால் தொழிற்சங்கத் தலைவரும், இன்னும் ஆறுபேர்களும் உண்ணாவிரதம் மேற்கொண்டு சாகுந்தறுவாயிலிருக்கின்றனர் என்றும், இவ்வாறு தொழிலாளர் பிரச்சினைகளில் நெருக்கடியை வளரவிட்டிருக்கும் மத்திய சர்க்காரின் போக்கு குறித்து விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்றும் ஷிபன்லால் சக்சேனா என்ற உ.பி. சுயேச்சை உறுப்பினர் ஒரு பிரேரணை கொண்டுவந்தார்.

உதவி தொழிலாளர் இலாகா மந்திரி அபீத் அலீ, தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்த தொழில் உறவுகள் முழுவதும் மாநில சர்க்காரைப் பொறுத்த விஷயம் என்று கூறியதன்பேரில், சபைத் தலைவர், பிரேரணையைத் தள்ளுபடி செய்தார்.

இமாசலப் பிரதேச சர்க்கார் நடத்துகிற பஸ் போக்குவரத்தில் பஸ் ஒன்று நியோக் அருகே கவிழ்ந்ததினால் ஐந்துபேர் கொல்லப்பட்டதுடன் 14 பேர் காயமுற்றனர் என்றும், இந்தச் சம்பவம் பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்கவேண்டும் என்றும் பிரஜ் ராஜ் சிங் என்ற உ. பி. சோஷலிஸ்டு உறுப்பினர் கொண்டுவந்த பிரேரணையும் நிராகரிக்கப்பட்டது.

இமாசலப் பிரதேச சர்க்காரிடமிருந்து விவரம் கேட்டு அறிக்கை ஒன்று தருவதாக உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் கூறினாராம்!

உங்களுக்குத் தெரியுமா?

★

மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் கோரிக்கை

மாநிலங்களிலுள்ள பெரிய குளங்களிலும், ஏரிகளிலும் மீன் பண்ணைகளை ஏற்படுத்துவதற்காக 'சர்வே' நடத்தும்படி அந்தந்த மாநில சர்க்கார்களை இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறார்களாம்!

அங்கு மட்டுந்தானா?

பீகார் மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தை விரிவாக்குவதற்காக இந்திய சர்க்கார் ரூ. 21 25,000 ஒதுக்கியிருக்கிறார்களாம்.

250 குடும்பங்களைக் குடியேற்றுவதற்குத் திட்டம்

நிலமில்லாத தொழிலாளர்களான 250 குடும்பங்களை பீகாரிலுள்ள 1,000 எக்கரா பூதான நிலத்தில் குடியேற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள 'மாதிரித் திட்ட'த்தை இந்திய சர்க்கார் அங்கீகரித்து அதற்கென ரூ. 2½ இலட்சமும் அனுமதித்துள்ளனராம்!

தெரிவித்திருந்தால்...?

"இரண்டாம் திட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்காக மதுவிலக்குக் கொள்கையைக் கைவிட வேண்டும் என்று எந்த மாநில சர்க்காரும் இதுவரை திட்டக்குழுவிற்குத் தெரிவிக்கவில்லை" என்று மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

ரூ. 21-இலட்சம் செலவிடப்பட்டதாம்!

தேசியப் பொருட்காட்சி மண்டபத்திற்கான கட்டட வேலைக்காக செப்டம்பர் இறுதிவரையில் ரூ. 20,80,376 செலவு செய்யப்பட்டதாம்.

எங்கோ, எதற்கோ?

தொழில் நிதிக் கார்ப்பொரேஷன், தொழில்துறைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 10,72,50,000 கடன் தொகைகள் வழங்கியிருக்கிறதாம்!

குழந்தைகளுக்குக் கல்வி வசதி

புதுடில்லி, நவ. 23—

1965—66-ம் ஆண்டிற்குள் 6 வயது முதல் 11 வயதுவரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி வசதியளிக்க வேண்டும் என்று வற்புறுத்தி மத்திய கல்வி விஞ்ஞான குழுக் கூட்டத்தில் பலர் பேசியுள்ளனர்.

பல்வேறு மாநிலங்களில் எஞ்சினீயரிங் கல்லூரிகள்

மாநிலங்கள் சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 23—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு மாநிலங்களிலும் எஞ்சினீயரிங் கல்லூரிகள் எட்டும், பாலிடெக்னிக்குகள் 29-ம், ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் 61-ம் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன" என்று, மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது, எஞ்சினீயரிங் கல்லூரிகள் ஆந்திரா, கேரளா, பம்பாய், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ஒரிசா ஆகியவிடங்களில் ஒவ்வொன்றும், அசாமில் இரண்டும் ஏற்படுத்தப்படும்.

இவற்றுடன், தனியார் நிறுவனங்களால் ஆரம்பிக்கப்படுகிற மூன்று எஞ்சினீயரிங் கல்லூரிகளுக்கும், ஒன்பது பாலிடெக்னிக்குகளுக்கும் இந்திய சர்க்கார் இதுவரையில் ஒப்புதல் அளித்துள்ளனராம்; அம்மூன்று எஞ்சினீயரிங் கல்லூரிகளில் இரண்டு சென்னையிலும், ஒன்று பஞ்சாயிலும் ஒன்பது பாலிடெக்னிக்குகளில் சென்னையில் மூன்றும், கேரளாவில் நான்கும், ஆந்திராவில் ஒன்றும், மத்தியப் பிரதேசத்தில் ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

மதுரை, கோவை கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள்

விரிவாக்கும் திட்டத்திற்கு அனுமதி கிடைத்துவிட்டதாம்

மதுரை, கோவை பாலிடெக்குடன் சேர்ந்த கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களை இரண்டாவது திட்ட காலத்தில், முறையே ரூ. 3·76 இலட்சம்; ரூ. 3·24 இலட்சம் செலவில் முழு அளவுக்குக் கைத்தொழில் பயிற்சி நிலையங்களாக விரிவாக்கும் திட்டத்துக்கு இந்திய அரசாங்கம் அனுமதியளித்துவிட்டது. 1957—58-க்கு செலவு தனித்தனியே ரூ. 50,000 என வரையறுக்கப்பட்டிருக்கிறது; செலவுகளில் 60 சதவிகிதத்தை இந்திய சர்க்கார் ஏற்கும்.

மக்கள் சபையில் கிளியும் வல்லூறும்!

இப்போது இந்திய சர்க்காரில் அமைச்சராக உள்ள டி. டி. கிருஷ்ணமாச்சாரி வாணிய அமைச்சராக இருந்தபோது ஒதுக்கிய அந்நியச் செலாவணி பற்றி குறை கூறுவதை, 'கிளிப் பேச்சு' என்று அவர் மக்கள் சபையில் கூறினர்.

"அரசாங்கத்தின் பக்கமும் 'கிளி'கள் இல்லையா?" என்று ஒரு உறுப்பினர் கேட்டார்.

டி. டி. கே. பதிலளிப்பதற்குள் மற்றொரு உறுப்பினர், 'வல்லூறுகள்' மட்டுமே உள்ளன என்றார்.

உடனே நிதி அமைச்சர், 'உறுப்பினர், அவருடைய விருப்பப்படியே கருதட்டும்; ஆனால் நாங்கள், வல்லூறுகளைப்போல் குறுக்கிடுபவர்களை ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்' என்றார்.

அமராவதி திட்டம்

விளைபயிர் அளவு பற்றி சர்க்கார் அறிவிப்பு

சென்னை, நவ. 23—

அமராவதி திட்டத்தின் 21,000 எக்கர் ஆயக்கட்டுப் பிரதேசத்தில் 18,000 எக்கரில் புன்செய் விளைபயிர் வகைகளையும், 3,000 எக்கரில் கரும்பையும் சாகுபடி செய்ய அனுமதிப்பதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

புன்செய் விளைபயிர்வகைப் பிரதேசத்தில் பொதுப்படையாக நன்செய்ப் பயிர்கள் பயிர் செய்ய அனுமதிக்கப்படாது. ஆனால், நீர்க்கசிவு மிக அதிகமாக இருக்கும் இடங்களில், புன்செய்ப் பயிருக்கு ஒதுக்கப்பட்ட 18,000 எக்கரில் ஆயிரம் எக்கரில் மட்டும் நன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்ய அனுமதிக்கப்படும்.

பருவ காலமில்லாத சமயங்களில் ஆயக்கட்டுப் பகுதியிலுள்ள கிணறுகளிலிருந்து 5 குதிரை சக்திக்கு மேற்படாத 'பம்ப்' மூலம் தண்ணீரை இறைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும். இந்த விஷயத்தில், புன்செய்ப் பயிர்ப் பகுதி கிணறுகளுக்கும், கரும்புப் பயிர்ப் பகுதி கிணறுகளுக்கும் இடையே வித்தியாசம் எதுவும் காட்டப்படாது.

ஆயக்கட்டைத் துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காக 50 எக்கருக்கும், அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்குமாக வாய்க்கால்களை சர்க்கார் செலவில் வெட்ட அரசாங்கம் எற்கெனவே உத்தரவிட்டுள்ளது.

கேரளத்தின் நீர்வளம்

புள்ளிவிவரம் சேகரிக் முயற்சி

திருவனந்தபுரம், நவ. 22—

கேரளத்தில் மொத்தம் 26 உபநதிகள் உள்ளனவாம்.

இந்த நதிகளிலிருந்து எவ்வளவு விவசாயத்திற்குப் பயன் படுகிறது—மின்சாரத்திற்கும், மற்றும் இதர வேலைகளுக்கும் எவ்வளவு பயன்படுகிறது என்பது பற்றியும் இவற்றிலுள்ள மீன்வளம் முதலிய தகவல்களைச் சேகரிக்கவும், மேற்கொண்டு வீணாக்கப்படும் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளவும், நதியின் ஓட்டத்தைத் திருப்பவும் புள்ளிவிவரம் தயாரிக்கும் முயற்சியில் கேரள அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாம்.

ஏழைகளுக்கு சர்க்கார்நிலம்தரப்படுகிறது

கேரள அரசாங்க உத்தரவு

திருவனந்தபுரம், நவ. 23—

வடமலபாரில் காட்டம்பள்ளி சிறைச்சாலையைச் சேர்ந்த புறம்போக்கு நிலத்தை அந்தப் பகுதியிலுள்ள நிலமில்லாத ஏழை மக்களுக்கு வழங்குமாறு கண்ணனூர் மாவட்ட கலெக்டருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது, கேரள அரசாங்கம்!

அரசாங்கத்திற்குத் தேவைப்படாத நிலத்தை நில மற்றவர்களுக்கு வழங்குவது கேரள அரசாங்கத்தின் கொள்கை.

இத்தகைய நிலங்களில் 25 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படும்.

காட்டம்பள்ளியிலுள்ள அந்த அரசாங்க நிலத்தைப் பெற அங்கு கிளர்ச்சி நடைபெற்றதுடன், கிளர்ச்சிக்குப் பிறகே கேரள அரசாங்கம் சாதக சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரசாயன உரத்திற்கும் திண்டாட்டமா?

புதுடில்லி, நவ. 22—

உற்பத்தி பெருக வேண்டுமென்று பேசப்படும் இந்தக் காலத்தில் 3 இலட்சம் டன் அளவுக்கு இரசாயன உரம் பற்றாக்குறையாக இருப்பதாக மக்கள் சபையில் உதவி உணவு அமைச்சர் கிருஷ்ணப்பா கூறியுள்ளார்.

சென்னை-இராயபுரம் 2-வது வட்டத்தில் கழக முழக்கம்

கி. மனோகரன், என். சீவரத்தினம் கலந்துகொண்டனர்

சென்னை 2-வது வட்டம் இராயபுரம் தி. மு. க. கிளை சார்பில், ஆதம்சாயபு தெருவில், 17-11-57 மாலை 6-30 மணியளவில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் சி. ஆர். அர்ச்சுனன் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரைக்குப் பிறகு தோழர்கள் அ. அன்புரோசு, தி. ந. மதிவாணன் ஆகியோர் பேசினர்.

பின்னர் தோழர் கே. டி. நித்தியானந்தம், இயக்கப் பாடல்கள் சில பாடினர்.

பின்னர் தோழர் பி. எம். கருணாகரன் தெலுங்கில் சிறிது நேரம் பேசியதும் தோழர் என். சீவரத்தினம், தி. மு. கழகத்திற்கு மக்கள் பெரும் ஆதரவு தந்து பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பிறகு தோழர் ஆர். எல். லிங்கராசு சிறிதுநேரம் பேசினர்.

இறுதியாக தோழர் கி. மனோகரன் அவர்கள் பேசினர்; அவருக்கு 2-வது வட்ட தி. மு. க. சார்பில் கைத்தறித் துணியும், 4-வது வட்ட தி. மு. க. சார்பிலும், தோழர் அ. நல்லதம்பி சார்பிலும் மலர் மாலைகளும் சலவைத் தொழிலாளர் சார்பில் கைத்தறித் துண்டும், மற்றும் பல தோழர்களால் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் மனோகரன் பேசுகையில், பெரியார் அவர்கள் காமராசர் ஆட்சிக்கு வரவேண்டும் என்று எப்படியெல்லாம் தேர்தல் நேரத்தில் பாடுபட்டார்கள் என்பதை விளக்கியும், அப்படியிருந்தும் அவருக்கெதிரான சட்டத்தை நிறைவேற்றியுள்ளதைக் கண்டித்தும், ஆச்சாரியார், முன்பு இந்தி விஷயத்தில் இருந்த நிலையையும், இப்பொழுது அவர் இந்தியைக் கடுமையான அளவிற்கு எதிர்க்கும் நிலைபற்றியும் விளக்கினர்.

அரசியல் சட்டத்தை இயற்றிய டாக்டர் அம்பேத்காரிடம் ஆச்சாரியார், தென்னாட்டுக்கும், வடநாட்டிற்குமுள்ள வித்தியாசங்களை முன்வைத்து, அரசியல் சட்டம், தென்னாட்டிற்கு வேறாகவும் வடநாட்டிற்கு வேறாகவும் நிறைவேற்றவேண்டுமென்று விளக்கிச் சொன்னதையும், அதன் பொருட்டுதென்னாட்டு பிரிவினைக்கான ஆதரவையும், டாக்டர் அம்பேத்காரின் மேற்கோள்களையும் குறிப்பிட்டுப் பேசினர்.

பிறகு, இந்தி நுழைகின்ற முறைகளை விளக்கியதுடன், நாம் தீவிரமாய் எதிர்க்க வேண்டுமென்றும் கோரினர்; நாம் இந்தியை எதிர்க்கவேண்டும் என்ற உச்சகட்டத்திற்குச் செல்லும்போது, அது, மொழியுடன் மட்டும் நில்லாது நாட்டுப்பிரிவினையின் உச்சக் கட்டத்திற்கும் செல்லும் என்றும் எடுத்துரைத்தார்.

சேதுக்குவாய்த்தான் தி.மு.க. பொதுக்கூட்டம்

17—11—57 இரவு 7 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் வ. பாலன் தலைமையில் புனித சவேரியார் வீதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வழக்கறிஞர் டி. செவந்தி, நெல்லை மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம், தோழர்கள் ஆ. அண்ணாமலை, பி. கே. அமீர்கம்சா ஆகியோர் பேசியபின், வடநாட்டு சர்க்கார் தென்னாட்டின் மீது கட்டாயமாக இந்தி திணிப்பதை எதிர்த்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

முத்துக்கிருட்டிணபுரத்தில் தி. மு. கழகக் கூட்டம்

சாத்தான்குளம் தி. மு. கழக ஆதரவில் 29-10-57-ல், முத்துக்கிருட்டிணபுரம் பிள்ளையார் கோவில் முன்பு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் ஆ. இராமுவேல் தலைமை வகித்தார்; கழகக் கொள்கைகளை விளக்கி தோழர்கள் தா. ஜான் டேவிட், பி. ஆறுமுகத்துரை ஜேசுதாஸ், இரா. நல்வினைவேல், கே. சேர்மத்துரை ஆகியோர் பேசியபின் தோழர் ஆ. அண்ணாமலை தற்கால அரசியல் நிலைமை விளக்கியும், தி. மு. கழகக் கொள்கைகளை தெளிவாக்கியும், திராவிடநாடு பிரிவினையை வலியுறுத்தியும் பேசினர்.

ஆறுமுகனேரி தி.மு.க. பொதுக்கூட்டம்

23—10—57-ல், தோழர் சபாராசு ஸ்டீபன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது

நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர். பின்னர் தோழர்கள் தர்மராசு, எஸ். எம். இபுராகீம் ஆகியோர் பேசியபின் இறுதியாக திருவைத் தோழர் ஆ. அண்ணாமலை இந்திப் பிரச்சினையைத் தெளிவாக விளக்கியும், சென்னை அமைச்சர்களின் முரணான பேச்சுகளைக் கண்டித்தும், வடநாடு—தென்னாடு பேதங்களையும், தென்னாடு புறக்கணிக்கப்படுவதையும் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டியும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் வந்தால் கட்சி—கருத்து மாறுபாடுகளை மறந்து இளைஞர்கள் அனைவரும் மொழி காக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் பேசினர்.

செயலாளர், தோழர் ச. கெ. ஆதித்தன் இந்தித் திணிப்பைக் கண்டிக்கும் தீர்மானத்தைப் படித்து நிறைவேற்றினர்.

பெங்களூர் மாவட்ட தி.மு.க. பொதுக்கூட்டம்

13—10—57 மாலை 6 மணிக்கு பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் சார்பில், சிவாஜி நகரில் தோழர் எஸ். ஜே. உசேன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழியர் எஸ். கே. ஜெகதீசுவரி, தோழர்கள் கி. சோழன், அரங்கண்ணல், ஜே. கனகசுந்தரம், எஸ். வி. பதி ஆகியோர் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசினர்கள். தோழர் வெங்கண்ணா கன்னடத்தில் உரையாற்றினார்.

கூட்டம் துவங்குவதற்குமுன் பெங்களூர் சிட்டி சுபாஷ் நகரிலிருந்து தோழர் சு. கண்ணன் தலைமையில் மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் புறப்பட்டு முக்கியமான நகரப் பகுதிகள் வழியாக சிவாஜி நகரை வந்தடைந்தது.

இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றியபின் கூட்டம் இனிது முடிவடைந்தது.

செ.நா. பாளையம்—நடுவீரப்பட்டு தி.மு.க. பொதுக்கூட்டம்

12—11—57 மாலை 6 மணியளவில் தோழர் வை. சிவப்பிரகாசப் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் என். ஜீவரத்தினம், தருமாஞ்சுலு, சே. மூசா. ஆகியோர், 'இந்திய அரசியலும் இந்தித் திணிப்பும்' என்பது பற்றி விளக்கவுரையாற்றினர்.

பேச்சாளர்களுக்கு ஆமதாபாத்—மணிநகர் 2-வது வட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் அ பழனியாண்டி மலர்மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவித்துப் பாராட்டினர்.

கடலூரில் மாபெரும் பொதுக்கூட்டம்

இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி கலந்துகொண்டனர்

கடலூர் நகர தி. மு. கழகச் சார்பில், 20—11—57 இரவு 9-மணிக்கு மஞ்சை நகர் மைதானத்தில், தோழர் இரெ. இளம்வழுதி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது; தலைவர் நம்நாட்டிற்குத் தேவையில்லாத இந்தி மொழியால் தமிழ் கெடும் என்பதைச் சுருக்கமாக எடுத்துக் கூறினர்.

தோழர்கள் அறிவுடைநம்பி, க. அறிவழகன், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., ஆகியோர் மத்திய சர்க்கார் இந்தியைப் புகுத்தி நமது திராவிட நாட்டை அடிமைபாக்குவதை பல ஆதாரங்களுடன் நிரூபித்து, தமிழ் வளர வேண்டுமானல் இந்தியை இந்நாட்டிற்கு வர முடியாமல் செய்யவேண்டுமென்று கூறினர்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இந்தியின் இலக்கியம் இல்லாத இலட்சணத்தையும், இந்தி குதிரைக்கார குடும்பத்தின் மொழி என்பதையும், கேர் கமிட்டியின் அறிக்கையின் தகிடுதத்த முறையையும் கூறி, நம் நாட்டை வடநாடு எந்த முறையிலும் ஏமாற்றலாம்; ஆனல், இந்தி மொழி கட்டாயப் படிப்பால் மட்டும் நம்மை ஏமாற்றிவிட முடியாது என்பதை ஆணித்தரமாகக் கூறி, வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு ஒரு எச்சரிக்கையை விடுத்தார்.

தோழர் கி. கோவிந்தராசன் நன்றி கூறலுடன் கூட்டம் இரவு $12\frac{1}{2}$ மணிக்கு முடிந்தது; தோழர் கே. டி. நித்தியானந்தம் இசை வழங்கினர்.

இராசிபுரம் 16-வது வட்ட தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா

சேலம், நவ. 7—

6—11—57 மாலை டை தி. மு. கழகக் கிளை திறப்புவிழா தோழர் இரா. தேசி தலைமையில் நடைபெற்றது; தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கழகத்தைத் துவக்கி வைத்து, தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

சட்டமன்றத்தில் தி. மு. கழகம் எவ்வாறு சிறப்பாகப் பணியாற்றிவருகிறது என்பதை விளக்கி தோழர் கே. ஏ. நடராசன் பேசினர்.

தி. மு. கழகத்தின் 9 ஆண்டு சாதனைகளை விவரித்து தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு பேசினர்.

தோழர் சிற்றளி ஏ. சுப்பிரமணியம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், கட்டாயமாகத் திணிக்கப்படவிருக்கும் இந்தியை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

வல்லூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

27—10—57 மாலை 6 மணிக்கு, தோழர் யுகந்தம் தலைமையில் கூட்டம் துவங்கியது. தோழர் வை. பார்த்தசாரதி கழகத்தின் மீது சில பூசல்களைக் கிளப்பி இந்த வட்டத்தில் மாற்றுக் கட்சியைச் சார்ந்தோர் பேசியதையும், தொழிற் சங்கங்களில் அவர்கள் தொழிலாளர்களுக்கு எதிராகச் செய்யும் சூழ்ச்சிகளையும் விளக்கிப் பேசினர்.

பின்னர் தோழர் வி. எஸ். கோவிந்தராசன், தற்போதைய அரசியலில் அவர்கள் நிலைகுறித்து விளக்கம் தந்தார்.

கடைசியாக, தோழர் கண்ணதாசன் அவர்கள், தென்னக மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள இந்தியைக் கண்டித்தும், அதற்கு அடிவருடிகளாக இருக்கும் சென்னை சர்க்காரின் போக்கைக் கண்டித்தும் பேசினர்.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம்

மாவட்ட 3வது மாநாடுபற்றி முடிவு

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில், 27—10—57 ஞாயிறன்று தேவகோட்டையில் கூடிற்று.

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக மூன்றுவது மாநாட்டை தேவகோட்டையில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராவார்.

மாநாட்டின் செயலாளர்களாக தோழர்கள் இராம. வெள்ளையன் (தேவகோட்டை) மா. குருசாமி (திருவில்லிபுத்தூர்) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டுப் பொருளாளராக தோழர் நவ. மார்க்கண்டேயன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொண்டர்படைத் தலைவராக தோழர் க. தியாகராசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மற்றும் கழக ஆக்கவேலைகள் குறித்து சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னிமலையில் அண்ணா, சம்பத்

மகத்தான வரவேற்பும் பொதுக்கூட்டமும்

16—10—57 மாலை சென்னிமலை குடியரசுப் பூங்கா திடலில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; கரூர் நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் எம். குழந்தைவேலு தலைமையேற்று கழகக் கொள்கை குறித்துப் பேசினர்.

பின்னர் தோழர்கள் ஈரோடு, எஸ். அப்பாவு, ஏ. இராசலிங்கம், கன்னிவாடி கே. எஸ். எஸ். பெரியார் ஆகியோர் பேசினர்.

இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதைக் கண்டித்தும், அப்படிக் கட்டாயமாகத் திணிக்கப்பட்டால் கழகம் காட்டும் போராட்டப் பாதையில் போராட்டத்துக்குத் தயாராய் இருக்கும்படி தோழர்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் சென்னிமலை குமாரபுரித் தோழர்கள் சார்பில் அண்ணா அவர்களுக்கும், தோழர் சம்பத் எம். பி. அவர்களுக்கும் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

பல கிளைகள், மன்றங்கள், தனிப்பட்டவர்களின் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அண்ணா அவர்களுக்கும் சம்பத் அவர்களுக்கும் அணிவிக்கப்பட்டன.

பின்னர் சம்பத் அவர்கள் நீண்டதோர் உரையாற்றினர்.

பின்னர் அண்ணா அவர்கள் பேசுகையில், வடநாடு தென்னாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த முற்பட்டுள்ள பல வழிகளில், இந்த மொழி மூலம் முற்பட்டிருப்பது ஒரு வழியெனவும், மொழி அழிந்தால் நம் உணர்ச்சியும் அழிந்துவிடும் எனவும், நமக்குத் தனியான ஒரு சக்தியைத் தந்துவருவது தமிழ்தான் என்றும், அத்தகைய தமிழை அழிக்க—அதன் மூலம் நம்மை அடிமைப்படுத்த இந்திமொழியை இங்கு வடநாட்டு ஏகாதிபத்தியம் புகுத்த முற்பட்டிருக்கிறது எனவும், ஆகவே, எப்படியும் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதை நாம் முறியடித்தாக வேண்டும் என்றும் அதற்கான போராட்டம் ஏற்பட்டால் அதில் ஈடுபட—ஈடுபடுபவர்களுக்கு ஆதாவுதர எல்லோரும் தயாராய் இருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்கள்.

திருச்செந்தூரில் தி. மு. கழகக் கூட்டம்

31—10—57-ல், போர்டு உயர்நிலைப் பள்ளி முன்பு தோழர் கே. கணபதி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது; இந்தித் திணிப்பைக் கண்டித்தும், கழகக் கொள்கைகளை விளக்கியும் தோழர்கள் இராசன், தர்மராசு, ஆ. நல்லக்கண்ணு, டி. ஆர். சுப்பிரமணியம், எஸ். கலிங்கன ஆகியோர் பேசியபின், தோழர் ஆ. அண்ணாமலை காங்கிரஸ்காரர்கள் போக்குபற்றியும், டெல்லியின் போக்கு பற்றியும் விளக்கிப் பேசினர்.

வனவாசியில் தி. மு. கழக கூட்டம்

சி. பி. சிற்றரசு கலந்துகொண்டார்

21—11—57-ல், தி. மு. கழகச் சார்பில், மேற்கு வனவாசி கைத்தறி சொசைடிக்கு எதிரில் உள்ள 'எனெஸ்கே' திடலில், ஓர் பொதுக்கூட்டம் தோழர் சி. இராசகோபாலன் தலைமையில் நடைபெற்றது. டில்லி சர்க்காரின் இந்தித் திணிப்பைக் கண்டித்து தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஈ. ஆர். கிருஷ்ணன், ப. கண்ணன், க. கு. சின்னசாமி ஆகியோர் பேசினர்.

நமனசமுத்திரம் தி.மு.க. பொதுக்கூட்டம்

க. அறிவழகன், தென்னரசு கலந்துகொண்டனர்

15—11—57 மாலை 6 மணிக்கு புதுக்கோட்டையிலிருந்து 6-வது மைலில் உள்ள நமனசமுத்திரம் மில் தொழிலாளர் பகுதியில் தி. மு. க. கிளை சார்பில் ஓர் பொதுக்கூட்டம் மதுரை அன்புப்பித்தன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் எஸ். எஸ். தென்னரசு பேசுகையில், காங்கிரசாரின் தேர்தல் சாலப் பித்தலாட்டங்களையும், பொதுவுடைமையாரின் கொலை வெறியைக் கண்டித்தும், சட்டமன்றத்தில் நமது தோழர்கள் அண்ணா தலைமையில் நாட்டு விடுதலைக்கான அருமையான பணியில் ஈடுபட்டிருப்பதையும் விளக்கினர்.

தோழர் க. அறிவழகன் பேசுகையில், 'தொழிலாளர் மத்தியில் பழகி அவர்களை வழிநடத்திச் செல்ல இதுவரை தாங்கள்தான் இருக்கிறோம் என்று இறுமாப்புக் கொண்டிருந்தார்கள் சிலர்; ஆனல் இப்போது அந்த நிலை மாறி விவசாயிகள்—தொழிலாளர் மத்தியில் நாமும் செல்லும்போது அவர்கள் பொறாமை கொண்டு பிறவிக் குணமாம் பலாத்காரத்தை உபயோகிக்கிறார்களெனவும் குறிப்பிட்டு விட்டு, தொழிலாளிகளும் நாட்டு விடுதலைக்கான பாசறையாம் தி. மு. க.-வில் சேர்ந்து நற்பணியில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

நாடகம்

இரவு 10 மணிக்கு புதுக்கோட்டை நகர் மன்றத்தில் திருக்கோகர்ணம் குமரவேல் மன்ற நிதிக்காக கலைவாணர் நாடக மன்றத்தாரால் நடிக்கப்பட்ட நாடகம் தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு தலைமையிலும், க. அறிவழகன் முன்னிலையிலும் நடைபெற்றது.

ஆயுர்வேதத்திற்கு ஆதரவு

மேலும் 5 கல்லூரிகள் நிறுவப்படுமாம்

புதுடில்லி, நவ. 24—

ஆயுர்வேத மருத்துவ முறையை சர்க்கார் கவனப்பதில்லை— அலட்சியப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டினை மறுத்துரைத்த உள்நாட்டிலாகா மந்திரி தத்தார் மேலும் புதிதாக 5 ஆயுர்வேதக் கல்லூரிகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருப்பதாயும், ஏற்கனவே உள்ள 13 கல்லூரிகளும் விரிவுபடுத்தப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

புதுடெல்லி ஆயுர்வேத மருத்துவமனை ஒன்றில் புதிய கட்டிடம் ஒன்றினைத் திறந்துவைக்கும் போது மேற்கண்டவாறு கூறிய அவர், ஆயுர்வேதம் மிகப் பழமையானது' என்றும், 'நமது வேதங்களுள் ஒன்று' என்றும், எனவே, 'அதனை அலட்சியப்படுத்துவது என்பதே இருக்கமுடியாது' என்றும் கூறினாராம்!

வெள்ளத்துக்கு 241 பேர் பலி!

ரூ. 13 கோடி நஷ்டம்

புதுடில்லி, நவ. 24—

அக்டோபர் இறுதிவரையில், பல்வேறு மாநிலங்களிலும் ஏற்பட்ட பெரும் வெள்ளங்கள் அல்லது பெருமழையின் காரணமாய் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு சுமார் ரூ. 13 கோடி என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகவும், அந்தக் கால அளவில் 241 பேர் உயிரிழந்தனர்—2,650 மிருகங்கள் மாண்டதாகவும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

வேலை நேரம் அதிகரிப்பு

என். ஜி. ஓ.-க்கள் சங்கம் ஏற்க மறுக்கிறது

மதுரை, நவ. 25—

மத்திய அரசாங்க ஊழியர்களுக்குத் தரப்படும் ஊதியம் போன்று மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் ஊதியம் அளிக்க முன்வராத அரசாங்கம், மத்திய அரசாங்க ஊழியர்களின் வேலை நேரம், விடுமுறை போன்றவற்றைமட்டும் மாநில என். ஜி. ஓ.-வினருக்கு மாற்றியமைக்க முனைந்துள்ளது.

இப்போது என். ஜி. ஓ.-வினர் காலை 11 மணிமுதல் மாலை 5 மணிவரை உழைக்கின்றனர்; திங்கள்தோறும் 3-வது சனிக்கிழமை விடுமுறை தரப்படுகிறது; இந்த விடுமுறையை ரத்து செய்துவிட்டு, தினசரி காலை 10-30 மணிமுதல் மாலை 5 மணிவரை வேலை நேரத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டம் தீட்டியுள்ளது.

தமிழ்நாடு என். ஜி. ஓ.-வினர் சங்கம் இதை ஏற்கவில்லை.

அணு ஆயுதங்களைத் தடை செய்க!

64 கம்யூனிஸ்டு கட்சிகளின் கூட்டு அறிக்கை

பெல்கிரேட், நவ. 24—

அணு ஆயுதங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும், இராணுவக் கூட்டுகளைக் கலைக்க வேண்டும் என்றும் 64 கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டு அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர்.

'நல்லெண்ணம் படைத்த அனைவருக்கும்' அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் எல்லாம், தங்களின் சர்க்கார்களை, ஐ. நா. சபையில் ஒரு சமாதான பூர்வமான கொள்கையைக் கடைப்பிடிக்கவும், கெடுபிடி யுத்தத்தை எதிர்க்கவும் வற்புறுத்த வேண்டும் என்பதுதான்.

'வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள், போட்டியிட வேண்டியது யுத்தகளத்தில் அல்ல; மாறாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், முன்னேற்றம் காண்பதிலும்தான்' என்றும் அந்தக் கூட்டு அறிக்கை கூறுகிறது.

குழிப் பிணத்திற்கு உயிர் தர!

"தனி மனித சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டாகவேண்டும்"

என்று, மேற்கு ஜெர்மன் சான்சலர் டாக்டர் அடினூர், மற்றும் நெதர்லாந்து மன்னர், போன் ஹார்ட் என்பாரும் கூட்டுக்குரல் எழுப்பியிருக்கின்றனர்.

ஐரோப்பிய கலாச்சாரத்தையும், விஞ்ஞானத்தையும் பாதுகாத்து வளர்ப்பதற்கென நிதி வழி காணும் நோக்குடன், ஆம்ஸ்டர்டாமில் ஒரு மாநாடு நடைபெறுகிறது.

மூன்றுநாள் நடைபெறும் அந்த மாநாட்டில் பிரிட்டன் உட்பட 17 நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

ஐரோப்பிய ஒற்றுமைதான் மிகப் பிரதானமான பிரச்சினை என்றும், கலாச்சாரத்தாலும் சிந்தனை வழியாலும் ஒன்றுபட்டாலன்றி ஐரோப்பிய நாடுகள் தங்களின் சுதந்தரத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது என்றும் பலரும் மாநாட்டில் பேசினர்.

சேலம் குதிரைவண்டி தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பொதுக்கூட்டம்

26-11-57 மாலை 6-மணிக்கு, சேலம் வி. மார்க்கெட்டில், வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் தலைமையில் குதிரைவண்டி தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், கே. கே. பூர்ணையா, கே. எல். இரங்கசாமி, ஜே. பீர்முகம்மது ஆகியோர் பேசுவர்.

கல்கத்தா மெயிலுக்கு விபத்து

50 பேர் பலி; 100 பேருக்குக் காயம்

பம்பாய், நவ. 25—

பம்பாயிலிருந்து புறப்பட்ட கல்கத்தா மெயில் இங்கிருந்து 77 மைல் தூரம் சென்றதும் கோரமான விபத்துக்குள்ளாகியுள்ளது.

இயந்திரமும், முதல் மூன்று பெட்டிகளும் தடம் புரண்டுள்ளன; மேலும் நான்கு பெட்டிகள் கவிழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் 50 பேர் உயிரிழந்ததாகவும், 100-க்கு மேற்பட்டவர் காயமடைந்துள்ளனர் என்றும் ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

இறந்தவர்கள் 9 பேர் என்றும், காயமடைந்தவர்கள் 46 பேர் என்றும் அதிகாரபூர்வமாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து, பதலி-ஆசாவலி புகைவண்டி நிலையங்களுக்கிடையே நடைபெற்றுள்ளது.

மத்திய இரயில்வே அமைச்சர் செகசீவன்ராம், விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்றுள்ளார்.

'எசமானர்'களிடம் மனவருத்தம் கொண்டவர்களின் இழிசெயலே விபத்துக்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

பார்ப்பனரின் நலன்களைப் பாதுகாக்க!

பிராமண மகாசபையாம்!

சென்னை, நவ. 23—

'பிராமண மகாசபை' என்ற பெயரில் ஒரு இயக்கம் காண ஏற்பாடு நடக்கிறதாம்!

பார்ப்பன சமுதாயத்தின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக இந்த இயக்கமாம்!

இந்த இயக்கம் காணுவது சம்பந்தமாக சீக்கிரமே சமூகப் பெரியவர்களடங்கிய கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறதாம்!

வீடு கட்டும் திட்டம்

ஒரு கண்ணோட்டம்

புதுடில்லி, நவ. 25—

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் 13 இலட்சம் வீடுகள், 'இந்தியாவில், அரசாங்க—தனியார் துறையில் கட்டப்பட்டுள்ளனவாம்.

இரண்டாவது திட்ட காலத்தில் 19 இலட்சம் வீடுகள் கட்டப்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நிலக்கொடை வசதியுள்ள திட்டங்களுக்காக ரூ. 105 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம். இந்தத் தொகையில் சுமார் 3,06,000 வீடுகள் கட்டப்படலாம் என்று நம்பப்படுகிறது.

தனியார் துறையில் ரூ. 800 கோடி செலவில் 8 இலட்சம் வீடுகள் கட்டப்படலாம் என்று அரசாங்கம் கணக்கிட்டுள்ளது.

1961-ல் மொத்தம் 57 இலட்சம் வீடுகள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

போலீசாருக்குக் குடியிருப்பு வசதி திட்டம்

அனுமதிக்கப்பட்ட தொகையில் சென்னைக்குக் கிடைத்தது என்ன?

புதுடில்லி, நவ. 24—

போலீஸ்காரர்களின் வீட்டு வசதித் திட்டங்களுக்காக, 1956—58-ம் ஆண்டுக்காலத்தில் 14 மாநிலங்களுக்கு மொத்தம் ரூ, 2 28 கோடி கடன் அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதில் சென்னை மாநிலத்துக்குக் கிடைத்தது ரூ. 19.3 இலட்சம் தானாம்; உ. பி. மாநிலத்துக்கு தான் மிக அதிகம்—அதாவது. ரூ. 43 இலட்சம்; அடுத்து, பம்பாய்க்கு ரூ.36,69,000 கிடைத்திருக்கிறது.

எதிர்பார்த்து ஏமாந்துவிட்டனராம்!

'வீட்டுப் பிரச்சினை தீரவில்லையே' என்கிறார் பக்தவத்சலம்

சென்னை, நவ. 24—

நகரசபை எழுப்பிய புதிய அலுவலகக் கட்டிடம் ஒன்றினைத் திறந்துவைத்துப் பேசுகையில் மந்திரி பக்தவத்சலம், 'சென்னை நகரில் வீட்டுப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று எதிர்பார்த்தோம்; ஆனால் ஏமாந்துவிட்டோம்; அலுவலகங்களுக்கே இடமும் கிடைக்கவில்லை; புதிதாகக் கட்டிடம் எழுப்புவதும் கஷ்டமாயிருக்கிறது' என்று குறிப்பிட்டாராம்!

பி. டி. இராசன் பதவிப் பிரமாணம் ஏற்றார்

சென்னை, நவ. 23—

சென்னை மேல்(சட்ட)சபையின் உறுப்பினராக தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் இன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

மேல்சபைத் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் அவர்களின் இல்லத்தில் இப்பதவியேற்பு நடைபெற்றது.

திரு. இராசன் அவர்கள், கடந்த வாரத்தில், மேல் சபை உறுப்பினராக சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட்டது தெரிந்ததே.

காரைக்குடி நிலையத்தில் புதிய கண்டுபிடிப்பு!

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சாத்தியமாகுமாம்

புதுடில்லி, நவ. 24—

"காரைக்குடியிலுள்ள மத்திய மின்சார இரசாயன ஆராய்ச்சி நிலையம், 'இந்தியக் கனிப் பொருள்களிலிருந்து மாங்கனீஸ் சல்பேட்' தயாரிப்பதற்கும், 'எலெக்ட்ரோலிட்டிக் கூப்ரஸ் ஆக்சைட்' தயாரிப்பதற்குமான வேலை முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறது" என்று, மக்கள்சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'மாங்கனீஸ் சல்பேட்'டின் உற்பத்திச் செலவு குறைவாக இருந்தால், வெளிநாடுகளுக்கு அதை ஏற்றுமதி செய்வது சாத்தியப்படுமாம்!

விளையாட்டு நிறுவனங்களுக்கு தரப்பட்ட நிதி உதவி

தேன் பகுதிக்குக் கிடைத்ததோ என்னவோ?

"அகில இந்திய விளையாட்டுக் கௌன்சில் என்பது, விளையாட்டுகளின் அபிவிருத்தி பற்றி இந்திய சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்ட ஒரு ஆலோசனைக் குழுவேயாகையால், அது தேசிய விளையாட்டு நிறுவனங்களுக்கு மானியங்களோ உதவிகளோ அளிக்கவில்லை என்றும், குழு சிபாரிசின்பேரில் 1956—57-ம் ஆண்டில் நாட்டிலுள்ள 15 தேசிய விளையாட்டு நிறுவனங்களுக்கு மானியமாக அல்லது கடனாக மொத்தம் ரூ 4,41,901-ம், இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு வட்டியில்லாக் கடனாக ரூ. 1,10 500-ம் கொடுக்கப்பட்டன என்றும் மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டது.

1957-58-ல் ஏழு விளையாட்டு நிறுவனங்களுக்கு ரூ. 56 059 வழங்கப்பட்டிருக்கிறதாம்.

அதிகாரிகளின் பிரயாணப் படியில் சிக்கனம்

கேரள அரசாங்க உத்தரவு

திருவனந்தபுரம், நவ. 23—

அரசாங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் கார்கள், ஜீப் வண்டிகளையுடைய அதிகாரிகள் வேலைநிமித்தம் செல்லும்போது அந்த வண்டிகளையே பயன்படுத்த வேண்டும் என்று கேரள அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன் மூலம் அதிகாரிகளின் பிரயாணப்படி செலவில் சிக்கனம் எதிர்பார்க்கப்படுகிறது.

திறமையில்லையே!

'புத்தகம் வெளியிடும் பொறுப்பை 'அரசாங்கம் கைவிடவேண்டும்'

ஜெயபுரி, நவ. 23—

இராஜஸ்தான் மாநிலத்தில் அரசாங்கமே பள்ளிப் புத்தகங்களை அச்சடித்து வெளியிடும் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறது.

அரசாங்கத்திற்கு இத்துறையில் போதிய திறமையில்லாத காரணத்தினால் திட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்று கூறி, 'அரசாங்கமே புத்தகம் வெளியிடுவதைக் கைவிட வேண்டும்' என்று கோரி ஒரு தீர்மானம் சட்ட மன்றத்தில் கொண்டுவரப்பட்டது; விவாதத்திற்குப் பிறகு தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

சேலத்தில் மிதியணிகள் தயாரிப்பு நிலையம் ஏற்படும்

சேலம், நவ. 23—

சேலத்தில் துவக்கப்பட இருக்கும் மிதியணிகள் தயாரிப்பு நிலையத்திற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறு மத்திய அரசாங்கம் தொழில் நெறியாளருக்கு அறிவித்துள்ளது என்று தெரியவருகிறது.

சேந்தமங்கலத்தில் இதற்கான பயிற்சி நிலையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறதாம்.

கழகக் கூட்டங்கள்

★

சோழபுரம்:
கடைத் தெருவில்
26—11—57 காலை 10 மணிக்கு
தலைவர்: எம். வைத்தியநாதன்
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
கூ. ஆறுமுகம்
சு. இராசமாணிக்கம்
என். அசோகன்
பீ. ஏ. லிங்கன்
எஸ். ஏ. துரை

★

அம்மன்பேட்டை:
26—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: பி. ஏ. லிங்கன்
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
கூ. ஆறுமுகம்
கோ. சி. மணி
எஸ். ஏ. துரை
தோழர் சகநாதன் தலைமையில் ஊர்வலம் நடைபெறும்.

★

விளந்தை-ஆண்டிமடம்:
திரு. வி. க. திடலில்
27—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஆர். தட்சிணாமூர்த்தி
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
கணபதி ராமசுப்பையா
சி. ஜம்பு

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்

26—11—57 மாலை 6 மணிக்கு சென்னை எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில், திருமதி ஆர். சாந்திமதியம்மாள் தலைமையில் டி. கே. சண்முகம் 'யான் கண்ட மலேயா' என்பது பற்றிப் பேசுவார்.

அகில இந்திய அஞ்சல் ஊழியர் மாநாடு

நாகர்கோயில், நவ. 25—

அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கத்தின், அஞ்சல்காரர் 4-ம் பிரிவு ஊழியர்களின் மாநாடு, டிசம்பர் திங்களில் 18, 19, 20, 21, 22 ஆகிய தேதிகளில் நாகர்கோயிலில் நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

மாநாட்டிற்கு, மத்திய செய்திப் போக்குவரத்து அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, அஞ்சல் தொலைவழி பொது நெறியாளர் திரு. எம். எம். பிலிப், சென்னை அஞ்சல்துறை தலைமை அதிகாரி திரு. அனந்தகிருட்டினன் மற்றும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் பங்கு கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் கட்டணங்கள் — ஒரு புள்ளிவிவரம்

புதுடில்லி, நவ. 24—

சரக்குகள் இறக்குமதி—ஏற்றுமதி ஆகிய துறைகளில் செலவிடப்பட்ட கப்பல் கட்டணங்களின் மொத்த மதிப்பு 1954-ல் ரூ. 63 கோடி; 1955-ல் ரூ. 80 கோடி; 1956-ல் ரூ. 91 கோடியாக இருந்ததென்றும், 1956-க்கான தொகை மதிப்பு தற்காலிகமானதே என்றும் மக்கள்சபையில் நிதி அமைச்சர் கூறினார்.

திருத்தம்

'நம் நாடு' இன்றைய தலையங்கத்தின் முதல் பத்தியின் கடைசி பாராவின் துவக்கத்தில் '1854' என்றிருப்பதை '1954' எனத் திருத்தி வாசித்துக்கொள்ளுமாறு கோருகிறோம். (ஆ-ர்.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.